குறிப்பிட்டார்கள். அதற்காக அதிகாரிகளும் தஞ்சை வந்ததாக நான் அறிகிறேன். அவர்களும் நிலைமைகளை மாற்றுவது நல்லது என்று கருதியதாகச் சொன்னார்கள். ஆனால் தற்பொழுது அதில் ஏதோ தடங்கல் இருப்பதாக அறிகிறேன். அதனை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சில பகுதிகளை இந்த மருத்துவ மனையிலிருந்து அந்த மருத்துவ மனைக்கு மாற்றும்போது, அங்கு உள்ள பலதுறை டாக்டர்களின் பணியைக் கருத்தில் கொண்டு அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கல்லூரி கட்டப்படுகிற நிலையில், இந்தத் துறைக்கு இவ்வளவு இடம் இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்து உருவாகியுள்ளது. அந்த அளவு இடத்தைப் பிரித்து நீங்கள் பிறிதொரு பகுதிக்கு எடுத்துக்கொள்ளக் கூடாதென்று அங்குள்ளவர்கள் மறுப்பு தெரிவித்தார்கள். அந்த மருத்துவ மனையில் தங்கியிருந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்கூட, "இந்த மருத்துவ மனை ஒன்றையாவது ஒழுங்காக அமைப்புடன் இருக்க உதவி செய்யுங்கள். இட நெருக்கடி மிகுந்த மருத்துவ மனையாக மாற்றி விடாதீர்கள். வேண்டுமானால் இங்கு புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும்" என்று ஆலோசனை தெரிவித்தார்கள். இந்தப் பிரச்சினையில் இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கிற காரணத்தால், ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆனால் வசதிகளைப் பெருக்கி, ஏழை நோயாளியாக இருந்தாலும், கூடுமானவரையில் அவர்கள் நல்ல முறையில் சிகிச்சை பெறுவதற்கு வசதிகள் செய்து தரப்படும்.

Rajah Mirasdar Hospital, Thanjavur.

* 4 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU N. SUNDARESA THEVAR): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any complaint that the patients in Rajah Mirasdar Hospital, Thanjavur, are undergoing hardship because of the non-availability of necessary medicines; and

(*b*) the steps taken thereon by the Government?

தஞ்சை இராஜா மருத்துவ மனை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. என். சுந்தரேசத் தேவர் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை இராஜா மருத்துவமனையில் நோயாளிகட்குத் தேவையான மருந்துகள் கிடைக்காமல் இருப்பது குறித்து அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(இ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அந்த மருத்துவ மனையில் அண்மையில் கொடுக்கப்பட்ட ஊசிகள் காரணமாக சிலர் இறந்துவிட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அதுபற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன். அப்படி மேலும் நடக்காமலிருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வியில் மருந்து கிடைக்கவில்லை என்ற கேள்வி எழுந்தது. மருந்து கிடைக்கிறதென்று பதில் சொல்லியிருக்கிறேன். போடப்பட்ட ஊசிபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், சரியான பதிலை அறிந்து சொல்ல முடியும்.

Government Erskine Hospital, Madurai.

*5 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether additional technical equipments for the treatment of cancer are to be installed at the Government Erskine Hospital, Madurai; and

(*b*) if so, the details thereof?

மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக கூடுதல் தொழில் நுட்பச் சாதனங்கள் நிறுவப்படவிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?